# துறையூர் நகராட்சி.

## வரவு செலவுத் திட்டம்

## 2024-2025

Scanned with OKEN Scanner

துறையூர் நகராட்சி.

பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய

வரவு – செலவுத் திட்டம் 2024-2025ம் ஆண்டு.

1. முன்னுரை.

துறையூர் நகராட்சி 2024-2025ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினை பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவுத் திட்டம் என்ற புதிய நெறிமுறையை கடைபிடித்து தயாரிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவுத் திட்டம் என்பது நகராட்சியின் பல்வேறு சேவைகளால் பயன் பெறுபவர்கள் மற்றும் மக்கள் ஆகியோர் பெற்று வரும் பயன்களை கருத்தில் கொண்டு தயாரிக்கப்படுவதாகும். பயன்பாடு குறிக்கோளுடன் கூடிய வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதில் பின்வரும் செயல்முறைகள் பின்பற்றப்பட்டன.

நகரில் வசிக்கும் பல்வகையான மக்கள், பல்வேறு பகுதிகளில் வசிக்கும் பிரிவினர், குடிசைப்பகுதிகளில் வாழ்வோர், வசதியற்ற பிரிவினர் ஆகியோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட விபரங்களிலிருந்தும் ஏற்கனவே இந்நகரத்திற்கு தயாரிக்கப்பட்ட நகர கூட்டாண்மைத் திட்டம், தொலை நோக்கு திட்டம் (Vision Plan) மற்றும் வணிகத் திட்டம் (Business Plan) அடிப்படையாகக் கொண்டும் மக்கள் எதிர்பார்க்கும் பயன்பாடுகள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்பட்டன.

நகர மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய, மேற்கொள்ளப்பட வேண்டிய ஒவ்வொரு பணிக்கும் தேவைப்படும் அடிப்படையில் நிதி முதலீடுகள் திட்டமிடப்பட்டன. 2024-2025 -ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை ஒவ்வொரு துறையும் மேற்கொள்ள வேண்டிய பணிகளின் அடிப்படையிலும் மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வண்ணமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கென ஒவ்வொரு சேவையும் சிறு அலகுகளாகப் பிரிக்கப்பட்டு பின்னர் ஒரு சேவை பிரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் வருவாய் மற்றும் மூலதன செலவினங்கள் சேவை வாரியாக பெறப்படும் பயன்பாடுகள் மற்றும் பலன்களை (Out comes and Out puts) அறியும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

சேவை வாரியான ஒதுக்கீடுகள் துறை வாரியாகவும், பின்னர் நிதி வாரியாகவும் தொகுக்கப்பட்டுள்ளன.

வரும் காலத்தில் நகராட்சியின் வரவு செலவுத் திட்டத்தின்படியான பயன்பாடுகள் மற்றும் பலன்களின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு ஒரு கண்காணிப்பு அமைப்பினை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் குடிமக்கள் செலவிடப்பட்ட நிதியிலிருந்து பெற்ற பயன்பாடுகளையும் பலன்களையும் அறிந்துகொள்ள இயலும்.

Scanned with OKEN Scanner

துறையூர் நகராட்சி.

<u>முகவுரை</u>

துறையூர் நகராட்சியில் 2024–2025ம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டத்தினை பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய வரவு செலவுத் திட்டம் என்ற புதிய கோட்பாட்டின் அடிப்படையில் தயாரித்து அறிமுகப்படுத்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

இப்புதிய கோட்பாடு ஒரு நிதியாண்டில் செய்யப்பட்ட செலவுகளின் மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் வாயிலாக அடைந்த பயன்களின் தரம் மற்றும் அளவினை நகர மக்கள் அறிந்து கொள்ள வழிவகை செய்கின்றது. வரவு செலவுத் திட்ட அடிப்படையில் ஒவ்வொரு துறைகளும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு எவ்வளவு விழுக்காடு அளவிற்கு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை பொதுமக்கள் அறியவும் உதவும்.

இத்திட்டம் இந்நகராட்சி மக்களுக்கு வழங்கும் சேவையின் தரம் நகராட்சி வழங்கும் சேவைகள் மக்களுக்கு உரிய தரத்துடன் சென்றடைந்தனவா என்பதை அளக்கும் அளவுகோல் கொள்கை முடிவுகளை மேற்கொள்ள உதவும் வழிகாட்டி திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் பலன்களை மதிப்பீடு செய்து மக்களுக்கு திட்டங்களின் இலக்குகள் சென்றடைந்தனவா என்பதை அறிய உதவும் கருவி திட்டங்களின் பயன்பாட்டினை மேம்படுத்த உதவும் சாதனம்.

இவ்வரவு செலவுத் திட்டம் குடிமக்களின் முன்னுரிமைகள் மற்றும் தேவைகள் அடிப்படையில் சேவைகளை வழங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சியின் பல்வேறு வகைப்பட்ட செயல்பாடுகள் மற்றும் முன் முயற்சிகளை நிதி ஒதுக்கீடு மற்றும் அதனடிப்படையில் கிடைக்கும் சேவைகளை மட்டும் கணக்கில் கொண்டு மதிப்பிடாமல் பல்வேறு திட்டங்கள் மற்றும் சேவைகளின் மூலமம் மக்கள் நுகரும் அறுதிப் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்புதிய உத்தியின் மூலம் நம்மிடமுள்ள வள ஆதாரங்களை பயன்படுத்தி குடிமக்களின் எதிர்பார்ப்புகளை ஈடு செய்யும் வண்ணம் தரமான சேவைகளை அளிக்க இயலும்.

பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய இந்த வரவு செலவுத் திட்டம் மத்திய அரசின் நிதி அமைச்சகத்தின் செலவினத் துறையால் வெளியிடப்பட்டு ஏனைய அமைச்சகங்கள் மற்றும் துறைகளினால் பின்பற்றப்படும் வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் வளர்ந்து வரும் மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள நகராட்சி அமைப்புகளில் வெளிப்படையான நிர்வாகம் மற்றும் பதில் சொல்லும் பொறுப்பு ஆகிய இனங்களை பின்பற்றப்படும் சிந்த நடைமுறைகளையும் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

பயன்பாட்டுக் குறிக்கோளுடன் கூடிய இவ்வரவு செலவுத் திட்டம் நேர்த்தியான வெளிப்படையான பதில் சொல்லும் பொறுப்புடன் கூடிய தரமான சேவைகளை நகர மக்களுக்கு வழங்கும் எங்களுடைய தொடர் முயற்சியின் ஒரு புதிய பரிணாமமாக அமையும். இது போன்ற சேவைகளை மக்களுக்கு தொடர்ந்து வழங்க உறுதி பூண்டுள்ளோம் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இ.செல்வராணி,
நகர்மன்றத் தலைவர்,
துறையூர் நகராட்சி.

வே.இராமர்.
ஆணையர் (.கூ.பொ).
துறையூர் நகராட்சி.

Scanned with OKEN Scanner

# வருவாய் மற்றும் மூலதன நிதி.

2024-2025ம் நிதியாண்டின் மொத்த வருவாய் வரவு மற்றும் மூலதன வரவு 2331.71 இலட்சம் ஆகும். வருவாய் மற்றும் மூலதனச் செலவுகள் ரூ 2329.35 இலட்சம் ஆகும். எனவே 2024-25ம் ஆண்டில் வருவாய் நிதியில் மட்டும் நிர உபரி ரூ 2.36 இலட்சம் ஆகும்.

வருவாய் மற்றும் மூலதன நிதி , குடிநீர் விநியோகம் மற்றும் கால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி ஆகியவற்றின் சுருக்கம்.

**ரூபாய் இலட்சத்தில்.**

| விவரம் | வருவாய் நிதி | குடிநீர் வடிகால் நிதி | கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வருவாய் வரவினம் | 1025.57 | 178.90 | 60.68 | 1265.15 |
| மூலதன வரவினம் | 750.00 | 7100.00 | 0 | 7850.00 |
| மொத்தம் | 1775.57 | 7278.9 | 60.68 | 9115.15 |
| வருவாய் செலவினம் | 1021.37 | 176.50 | 24.16 | 1222.03 |
| மூலதன செலவினம் | 750.00 | 7100.00 | 0 | 7850.00 |
| மொத்தம் | 1771.37 | 7276.50 | 24.16 | 9072.03 |
| உபரி/பற்றாக்குறை | 4.20 | 2.40 | 36.52 | 43.12 |

Scanned with OKEN Scanner

# வருவாய் நிதி 2024-2025ம் ஆண்டிற்கான உத்தேச மதிப்பீடு.

மொத்த வரவு : 1775.57 இலட்சம்

மொத்த செலவு : 1771.37 இலட்சம்

உபரி : 4.20 இலட்சம்.

| வரவு (ரூ இலட்சத்தில் | | | செலவு (ரூ.இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| வரிசை எண் | தலைப்பு | 2024-25ம் வருட உத்தேச மதிப்பீடு | வரிசை எண் | தலைப்பு | 2024-25ஆம் வருட உத்தேச மதிப்பீடு |
| 1 | சொத்து வரி மூலம் வருவாய் | 220.77 | 1 | பணியாளர் ஊதியம் மற்றும் படிகள் | 633.52 |
| 2 | இதர வரிகள் மற்றும் கட்டணங்கள் மூலம் வரவு | 38.20 | 2 | ஓய்வூதிய பயன்கள் | 158.13 |
| 3 | வரி மற்றும் வரியில்லா இனங்கள் மூலம் வசூல் | 76.60 | 3 | பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவுகள் | 920.85 |
| 4 | மாநில நிதி குழுமம் மூலம் பெறப்படும் மான்ய வரவுகள் | 650.00 | 4 | நிர்வாக செலவுகள் | 26.72 |
| 5 | மான்யம் மற்றும் பங்குத்தொகைகள் | 750.00 | 5 | நோய் தடுப்பு பணி செலவுகள் | 22.15 |
| 6 | சேவைக் கட்டணம் மூலம் வரவு | 0 | 6 | நிதி செலவுகள் | 5.00 |
| 7 | இதர இனங்கள் | 40.00 | 7 | கடன் மற்றும் நகராட்சி பங்குத்தொகை செலுத்துதல் | 5.00 |
| | கூடுதல் (வரவு) | 1775.57 | | கூடுதல் (செலவு) | 1771.37 |
| | | | | உபரி | 4.20 |

Scanned with OKEN Scanner

# குடிநீர் வடிகால் 2024-2025ம் ஆண்டிற்கான உத்தேச மதிப்பீடு.

மொத்த வரவு : 7278.90 இலட்சம்

மொத்த செலவு : 7276.50 இலட்சம்

உபரி : 2.40 இலட்சம்.

| வரவு (ரூ இலட்சத்தில் | | | செலவு (ரூ.இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| வரிசை எண் | தலைப்பு | 2024-25ம் வருட உத்தேச மதிப்பீடு | வரிசை எண் | தலைப்பு | 2024-25ஆம் வருட உத்தேச மதிப்பீடு |
| 1 | சொத்துவரி மூலம் வருவாய் | 90.69 | 1 | பணியாளர் ஊதியம் மற்றும் படிகள் | 36.75 |
| 2 | நிர்ணயிக்கப்பட்ட இனங்கள் மூலம் பெறப்படும் வரவு | 0 | 2 | குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணம் செலுத்துதல் | 120.00 |
| 3 | மாநில நிதி குழுமம் மூலம் பெறப்படும் மான்ய வரவுகள் | 0 | 3 | பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவுகள் | 11.75 |
| 4 | மான்யம் மற்றும் பங்குத்தொகைகள் | 7100.00 | 4 | நிர்வாக செலவுகள் | 3.00 |
| 5 | குடிநீர் கட்டணம் மூலம் வரும் வரவு | 76.21 | 5 | புதிய குடிநீர் குழாய் பதித்தல் ஆழ்துளைக்கிணறு அமைத்தல் மற்றும் கை பம்பு அமைத்தல் | 7100 |
| 6 | இதர இனங்கள் | 12.00 | 6 | நிதி செலவுகள் | 5.00 |
| 7 | வைப்புத்தொகை (டெபாசிட்) | 0 | 7 | நிதி மாற்றம் | 0 |
| | கூடுதல் (வரவு) | 7278.9 | | கூடுதல் (செலவு) | 7276.5 |
| | | | | உபரி | 2.40 |

Scanned with OKEN Scanner

# ஆரம்ப கல்வி நிதி 2024–2025ம் ஆண்டிற்கான உத்தேச மதிப்பீடு.

மொத்த வரவு : 60.68 இலட்சம்

மொத்த செலவு : 24.16 இலட்சம்

உபரி : 36.52 இலட்சம்.

| வரவு (ரூ இலட்சத்தில் | | | செலவு (ரூ.இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| வரிசை எண் | தலைப்பு | 2024–25ம் வருட உத்தேச மதிப்பீடு | வரிசை எண் | தலைப்பு | 2024–25ஆம் வருட உத்தேச மதிப்பீடு |
| 1 | சொத்துவரி மூலம் வருவாய் | 56.68 | 1 | பணியாளர் ஊதியம் மற்றும் படிகள் | 0 |
| 2 | நிர்ணயிக்கப்பட்ட இனங்கள் மூலம் பெறப்படும் வரவு | 0 | 2 | புதிய கட்டிடம் கட்டுதல் | 0 |
| 3 | மாநில நிதி குழுமம் மூலம் பெறப்படும் மான்ய வரவுகள் | 0 | 3 | பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவுகள் | 23.16 |
| 4 | மான்யம் மற்றும் பங்குத்தொகைகள் | 0 | 4 | நிர்வாக செலவுகள் | 1.00 |
| 5 | சேவைக் கட்டணம் மூலம் வரும் வரவு | 0 | 5 | திட்ட செலவுகள் | 0 |
| 6 | இதர இனங்கள் | 4.00 | 6 | நிதி செலவுகள் | 0 |
| 7 | வைப்புத்தொகை (டெபாசிட்) | 0 | 7 | நிதி மாற்றம் | 0 |
| | கூடுதல் (வரவு) | 60.68 | | கூடுதல் (செலவு) | 24.16 |
| | | | | உபரி | 36.52 |

Scanned with OKEN Scanner